**செய்தி வெளியீடு எண் : 1492** **நாள் : 29.08.2022**

**செய்தி வெளியீடு**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (29.08.2022) சென்னை, ஊனமாஞ்சேரி, தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் நடைபெற்ற பயிற்சி உதவி ஆய்வாளர்களின் பயிற்சி நிறைவு அணிவகுப்பு விழாவில் காணொலி வாயிலாக ஆற்றிய உரை.**

தமிழ்நாடு காவல்துறைத் தலைமை இயக்குநர் அவர்களே!

தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியக இயக்குநர் அவர்களே!

காவல் உயரதிகாரிகளே!

சிறப்பு அழைப்பாளர்களே!

பயிற்சி ஆசிரியர்களே!

பயிற்சி உதவி ஆய்வாளர்களே!

அவர்தம் குடும்ப உறுப்பினர்களே!

பத்திரிகைத்துறை, ஊடகத்துறை நண்பர்களே, வணக்கம்.

நேற்று வரை, நீங்கள் தனி மனிதர்கள். இன்று முதல் நீங்கள் சட்டத்தின் காவலர்கள். நேற்று வரை, நீங்கள் உங்கள் குடும்பத்தின் உறுப்பினர்கள். இன்று முதல், காவல்படையின் லட்சக்கணக்கான உறுப்பினர்களில் ஒருவர். பொறுப்புமிக்க மனிதர்களாக நீங்கள் மாறும் பெருமைமிகு நாள் இது.

காவல்துறையில் நேரடி உதவி ஆய்வாளர்களாக அடியெடுத்து வைக்கும் 927 பயிற்சியாளர்களுக்கு கடந்த ஆண்டு செப்டம்பர் - 1 அன்று, காணொளியின் மூலம் நான் பயிற்சியைத் தொடங்கி வைத்தேன். இப்போது, நீங்கள் அந்தப் பயிற்சியை நிறைவு செய்து பணிக்குள் நுழைய இருக்கிறீர்கள். பயிற்சியை முடித்த களைப்பைவிட - பணியைத் தொடங்க

இருக்கும் மகிழ்ச்சி உங்கள் முகங்களில் தெரிகிறது. உங்கள் அனைவர்க்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதன் முறையாக, ஒரே நேரத்தில் 927 உதவி ஆய்வாளர்கள் பயிற்சியை முடித்துள்ளீர்கள். இதில் 632 பேர் தாலுக்கா அளவிலும், 264 பேர் ஆயுதப்படையிலும், 31 பேர் தமிழ்நாடு சிறப்புக் காவல் பிரிவிலும் பயிற்சியை நிறைவு செய்துள்ளீர்கள். உங்களில் 336 பேர், காவல்துறை மற்றும் பிற துறையில் பல்வேறு நிலைகளில் ஏற்கனவே பணிபுரிந்தவர்களாக இருக்கிறீர்கள். 591 பேர் மட்டும்தான், புதியதாக - துறையில் பணியமர்த்தப்பட்டவர்களாக இருக்கிறீர்கள். இருதரப்பும் கலந்து, இந்த அணியில் அனுபவம் வாய்ந்தவர்களும், புதிய ஆற்றல் மிக்கவர்களும் இடம் பெற்றுள்ளனர். பொறியியல், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களில் முக்கியப் பொறுப்புகளில் பணியாற்றியவர்களும் கூட, அப்பணியை கைவிட்டு, காவல்துறையில் பணிக்குச் சேர்ந்திருக்கிறார்கள் என்பது வரவேற்கத்தக்கது! பாராட்டுக்குரியது! இத்தகைய சேவை மனப்பான்மைக்கு உண்மையில் நான் வணக்கம் தெரிவிக்கிறேன்.

260 பெண் ஆய்வாளர்கள் இப்பயிற்சியில் இடம் பெற்றுள்ளனர்.

“நிமிர்ந்த நன்னடை,

நேர்கொண்ட பார்வை,

நிலத்தில் யாருக்கும் அஞ்சாத நெறிகள் கொண்டவர்களாக

பெண்ணினம் வாழ வேண்டும்” என்று

பாரதியார் சொன்னதுபோல், தங்களது பயிற்சியைப் பெண் உதவி ஆய்வாளர்கள் வெற்றிகரமாக முடித்துள்ளனர். இதன்மூலம் புதிய பணித்தேர்வுகள் அனைத்திலும், பெண்களுக்காக மூன்றில் ஒரு பங்கு இடஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்ற பெண்ணுரிமைக் காவலர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நோக்கம் நிறைவேறி வருவதைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

கடுமையான பயிற்சியை முடித்துக் களப்பணியாற்றச் செல்லும் பயிற்சி உதவி ஆய்வாளர்கள் அனைவரும் ஒளிமயமான ஏற்றம் காண எனது வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

- தமிழ்நாட்டில், உலகத்தரம் வாய்ந்த காவல் உயர் பயிற்சியகம் அமைய வேண்டும் என்ற எனது கனவு நனவாகியிருப்பதில் நான் உள்ளபடியே பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

- அறிவு மற்றும் திறமையோடு நல்ல மனவளப் பயிற்சிக்கும் முன்னுரிமை அளிக்கப்பட்டன.

- பயிற்சிக்குப் பொருத்தமாக உள்ளரங்கு மற்றும் திறந்த வெளிப் பயிற்சிகள் நடத்தக் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- பயிற்சி, பாடத்திட்டம் மற்றும் உள்ளடக்கம் போன்றவற்றில் புது உத்திகள் பயிற்சி உதவி ஆய்வாளர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

- பெண்கள் மற்றும் சிறார்களுக்கு எதிரான குற்றங்கள் முதல், கணினிசார் குற்றங்கள் வரையிலான பல்வேறு குற்ற நிகழ்வுகளைப் புலன் விசாரணை செய்ய அதிகாரிகளுக்குத் திறன்பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியானது, உங்களது ஒவ்வொரு நிமிடத்தையும் வழிநடத்தும் என்பதில் ஐயமில்லை.

தமிழ்நாடு காவல் பயிற்சியகமானது, பயிற்சி உதவி ஆய்வாளர்களுக்குக் களப்பணி மற்றும் ஆழ்ந்த தொழில்முறை தலைமைப்பண்பு, பகுத்தறிவும் புத்திக்கூர்மை, மென்கணினித் திறன்

ஆகியவற்றைப் பயிற்சியின் மூலம் பதியவைப்பதில் வெற்றி பெற்றுள்ளதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன்.

ஒரு நல்ல ஆட்சியின் தரத்தை அளவிட, காவல்துறையினரின் செயல்பாடு முக்கியக் கூறாகக் கருதப்படுகின்றது.

தனிநபர் உயிருக்கும், உரிமைக்கும் பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கு பராமரிப்பு, பொது அமைதியைப் பேணுதல் ஆகியன ஒரு மாநிலத்தின் வளர்ச்சிக்கு இன்றியமையாததாக விளங்குகிறது. இதில் காவல்துறையின் பங்குதான் மிகமிக முக்கியமானது.

சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றுவது உங்களது முக்கியக் கடமை. குற்றம் நடக்காமல் தடுப்பதும் உங்களது கடமையாக இருக்க வேண்டும். எந்தக் குற்றவாளியும் தப்பிவிடக் கூடாது என்பதிலும் கவனமாக இருக்க வேண்டும். அதேநேரத்தில், அப்பாவி யாரும் தண்டிக்கப்பட்டுவிடக் கூடாது. எப்போதும் பாதிக்கப்பட்டவர்க்கு நீதி கிடைக்க உங்களது பணியைப் பயன்படுத்துங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சுரங்கத்திலிருந்து வெட்டி எடுக்கப்படும் நிலக்கரித் துண்டு ஒன்று, எவ்வாறு பட்டை தீட்டப்பட்டு, தெளிவு, நிறம் மற்றும் தரத்தில் மேம்பட்டு வைரமாக உருப்பெறுகிறதோ - அதுபோல காவல்துறையினரான நீங்கள் கடமை, வீரம், திறமை, இரக்கம் ஆகிய நற்பண்புகளைப் பெறும் வகையில், இங்கு பயிற்சியளிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பண்பாட்டை நீங்கள் எந்நாளும் காப்பாற்ற வேண்டும்.

சட்டம்தான் உங்களுக்கு வழிகாட்டும் ஒளிவிளக்கு!

அந்தச் சட்டத்தை நிலைநாட்ட உங்களது திறமையும், வீரமும், இரக்கமும் பயன்படட்டும். சட்டம் மட்டுமே உங்களை வழிநடத்த வேண்டும். சாதி, மதம் போன்ற பாகுபாடுகள் உங்கள் பணியில் குறுக்கிடக் கூடாது. ஏழை - பணக்காரர் என்ற பேதம் பார்க்கக் கூடாது. உயர்ந்தவர் - தாழ்ந்தவர் என்ற எண்ணம் கூடாது. பாதிக்கப்பட்டவர் - குற்றம் செய்தவர்

என்பதே உங்களது அளவுகோலாக இருக்க வேண்டும். யாரையும் ஒரு பக்கச் சார்புடன் அணுகி, பிரச்சனையைப் பார்க்காதீர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சட்டத்தை மீறுவோர் மனதில் அச்சத்தை ஏற்படுத்தும் வகையிலும், சட்டத்தை மதிக்கும் மக்களிடமிருந்து, மதிப்பு மற்றும் மரியாதை பெறும் வகையிலும் உங்களுடைய நடத்தை விளங்க வேண்டும் என்றார் முத்தமிழறிஞர் கலைஞர்.

சமுதாயத்திற்காகவும், மக்களுக்காகவும் உருவாக்கப்பட்டதுதான் காவல்துறை. குற்றவாளிகளை நீதிமன்றத்தின் முன் நிறுத்தி, அவர்களுக்கு தண்டனை பெற்றுத் தர எந்த அளவு நடவடிக்கைகள் எடுக்கிறீர்களோ, அதே அளவுக்கு - நலிந்த, பாதுகாப்பற்ற, சமுதாயத்தில் பின்தங்கிய அல்லது, வசதி வாய்ப்புகள் கிடைக்கப் பெறாதோரைப் பாதுகாக்கவும் நீங்கள் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

உங்களுடைய அனைத்து நடவடிக்கைகளும் நியாயமானதாக, பாரபட்சமற்றதாக, உறுதியானதாக, பண்புள்ளதாக இருக்க வேண்டும். மத, சாதி ரீதியில் பதற்றம் உள்ள சூழ்நிலைகளில், அது கொழுந்துவிட்டு எரிவதற்கு முன்னதாகவே முளையிலேயே பிரச்சினைகளை கிள்ளி எறியும் வகையில், நீங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

நீங்கள் உங்களது பணிக் காலத்தில், சீருடையின் மதிப்பிற்கும், புகழுக்கும் களங்கம் ஏற்படாதவாறு பணியாற்றுவதோடு, தமிழ்நாடு காவல்துறையின் கொடி பட்டொளி வீசிப் பறந்து மேலும் உயர்ந்து பறக்கப் பாடுபட வேண்டும். பொதுமக்களையும், உங்களுடன் பணிபுரியும் காவலர்களையும் மனிதநேயத்தோடும், புரிதலோடும் நடத்த வேண்டும்.

இப்போது உள்ள உடற்தகுதியையும், உற்சாகத்தையும், நீங்கள் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ள - உங்களுக்குள்ளேயே கடமை,

கண்ணியம், கட்டுப்பாடு, நேர்மை, சுயமரியாதை ஆகிய ஐந்து தூண்களை அடிப்படையாகக் கொண்டு செயல்பட வேண்டும்.

நீங்கள், பல சவால்களை சந்திக்க வேண்டிய நிலையில் உள்ளீர்கள் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். எத்தகைய நிலையையும் சமாளிக்கும் ஆற்றலை இந்த ஓராண்டு காலத்தில் நீங்கள் பெற்றுள்ளீர்கள் என நம்புகிறேன்.

பயிற்சி முடித்து - களப்பணிக்குச் செல்லத் தயாராக உள்ள பயிற்சி உதவி ஆய்வாளர்களுக்கும், அவர்களது பெற்றோர்களுக்கும், மற்றும் உறவினர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவர்களுக்கு, பயிற்சி அளித்த அனைத்து அதிகாரிகளுக்கும், பயிற்சியாளர்களுக்கும், அலுவலர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நாடும், நாட்டு மக்களும் உங்களை நம்பி ஒப்படைக்கப்பட்டுள்ளனர். மக்களைப் பாதுகாத்து மாநிலத்தின் மாண்பைக் காப்பாற்றுங்கள்.

நன்றி! வணக்கம்!

- - - -

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in